**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.272/2021**
**Prosecution Witness :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆதிநாராயணன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(23.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது விடத்தகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 5 வருடத்திற்கு முன்பாக எனது டிராக்டர் வேறு ஒரு வழக்கிற்காக திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் பின்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கில் நான் நீதிமன்றத்தில் மனு செய்து டிராக்டரை எடுக்க சென்ற போது அங்கிருந்த பேட்டரி காணாமல் போய்விட்டது. அதுசம்பந்தமாக நான் திருமங்கலம் தாலகா காவல் நிலையத்தில் சொன்னதற்கு அவர்கள் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் அதுசம்பந்தமாக புகார் கொடுக்க சொன்னார்கள். அப்போது திருமங்கலம் நகர் போலிசார் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கி கொண்டு என்னை போக சொல்லிவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. அதில் என்ன எழுதப்பட்டிருந்து என்ற விபரம் எனக்கு தெரியாது. **அந்த புகாரில்**

**உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இன்று வரை காணாமல் போன பேட்டரி எனக்கு கிடைக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் எழுதிதரவில்லை என்றால் சரிதான். என்னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கி கொண்டு போக சொல்லிவிட்டார்கள். நான் எந்தவொரு நபரையும், வழக்கு சொத்து எதையும் காவல் நிலையத்தில் நான் ஒப்படைக்கவில்லை. நான் எனது புகாரில் காணப்படுவது போல் திருமங்கலம் மீனாட்சிபவன் அருகே டிராக்டரை நிறுத்தியிருந்த போது ஒரு நபர் பேட்டரியை திருடியதாகவும் அவரை நான் பிடித்து திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும் புகாரில் சொல்லவில்லை. என்னுடைய டிராக்டரை சம்பவ தினத்தன்று தான் திருமங்கலம் தாலுகா காவல்நிலையத்தில் இருந்து திரும்ப பெறுவதற்கு உத்தரவு கிடைத்தது. அன்றைய தினம் வரை எனது டிராக்டர் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் தான் இருந்தது. ஆஜர் எதிரி திருடியதாக நான் எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை.

**மறுவிசாரணை**. இல்லை.